## பிப்ரவரி - 13

**"அன்பு தீங்கு நினையாது"**

**- 1கொரி 13 : 5**

யாராவது மற்ற காரியங்கள் சம்பந்தப்பட்டமட்டில் எவ்வளவு "கவனமாய்" நடந்தாலும் "பொல்லாத சம்சயங்கள்" சம்பந்தமாக கர்த்தருடைய கட்டளைகளை புறக்கணித்தால், தானே சிக்கிக்கொள்ள ஒரு வலையை தனக்குப் பின்னிக் கொள்ளுக்கிறான். ஏனென்றால் ஒத்த சிருஷ்டிகளுக்கு எதிரான அவநம்பிக்கையும் சந்தேகமும் கொண்ட ஒரு இருதயம், தேவனை சந்தேகிக்க பாதிக்குமேலாக தயாராயிருக்கிறது. வெதுவெதுப்பானா ஆவியும் கசப்பின் ஆவியும் கர்த்தரின் ஆவியாகிய அன்பின் ஆவியோடு போராடுகிறது. இவைகளில் ஏதாவதொன்று ஜெயிக்கும். தவறான ஆவி நீக்கப்பட வேண்டும் அல்லது அது கிறிஸ்தவனை அசுத்தப்படுத்தி அவனை ஆகாதவனாய் ஆக்கிவிடும். அதற்கு மாறாக புது சுபாவம் ஒரு ஜெயங்கொள்ளுகிறவனாக வெற்றி கொண்டால், அது இந்த விதமாக இருக்கும் பொல்லாத சம்சயங்கள் வெல்லப்பட்டால், இப்பொழுதுள்ள கஷ்டங்களுக்கும் தொடரும் பாவங்களுக்கும் எதிராக நடக்கும் போரில் பாதி போர் ஜெயிக்கப்பட்டதாகிவிடும்.

**- Z '05, 212 (R 3594).**

அன்பு இறுதியான பரிசோதனையில் நல்மனது என்று தெரியவரும். இது சமயசந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வெவ்வேறு விதமாகத் தன்னைத்தானே வெளிப்படுத்தும் ஒரு நல்மனது, அது உடையவர்க்கு தீங்கிழைக்கப்பட்டால் அது சம்பந்தமாக அவருடைய அறிவு குறைவாயிருந்தாலும் தீங்கு செய்தவர் நல்ல உத்தேசத்துடன் தான் செய்திருக்கிறார் என்று நம்புகிறார். இந்த விதமான ஆவி சந்தேகத்திற்கு இடங்கொடுக்காது. மற்றவர்களுடைய வார்த்தைகளையும் செய்கைகளையும் ஆதாரமாக கொண்டு மற்றவருக்கு பிரதிகூலமான காரியங்களை கட்டுவிக்காது.

**-P '30, 14.**

**ஒத்து வாக்கியங்கள்:-**

மத் 9:3,4,33-35; நீதி 10:12; 24:17; சங் 119:139; அப் 11:23; 1யோவா 3:14; 4:7,8; 2யோவா 4; 1தீமோ 6:4; 1பேது 1:22; 4:8; 3:8; கொலோ 3:2-14.

**கோபுர வாசிப்பு** : Z '13, 195 (R 5265).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் நான் அன்புடன் சந்தேகமற்றவனாக இருந்தேனா? அல்லது இல்லையா? உதவியாக இருந்ததும் இடையூறாக இருந்ததும் எது? பலன் என்ன?